# SWOAD

# Annual Report - 2007

## அறிமுகம்:

அம்பாறை மாவட்ட சமூக நல்வாழ்வு அமைப்பானது (SWOAD) 1995ம் ஆண்டு திரு.ச.செந்துராஜா அவர்களினால் நிறுவப்பட்டு அவரின் வழிகாட்டலுடன் செயற்பட்டுவருகின்றது. அம்பாறை மாவட்டத்தில் பாதிக்கப்பட்டு நலிவுற்ற நிலையில் வாழும் மக்களின் தேவைகளை நிறைவு செய்தலை இலக்காகக் கொண்டும் சிறந்த முறையிலான சேவைகளையும் சம வாய்ப்புக்களையும் வழிமுறையாகக் கொண்டு செயற்படும் அமைப்பாகும்.

இவ்வமைப்பானது அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களை மையமாகக் கொண்டு ஒரு தசாப்த காலத்தினையும் கடந்துவிட்ட நிலையில் பொத்துவில், திருக்கோவில், காரைதீவு, கல்முனை, சம்மாந்துறை, நாவிதன்வெளி உகணை ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் 54 கிராமக் கிளைகளில் தமிழ், சிங்களம், முஸ்லிம் ஆகிய மூவின மக்களினையும் உள்ளிணைத்து செயற்பட்டுக் கொண்டு வருகிறது.

செயற்பாட்டு வழிமூலங்களாக 7 பிரதேச செயலாளர் பரிவுகளில் 7 பிரதேச காரியாலயங்களையும் 54 கிராமக் கிளை அலுவலகங்களையும் அக்கரைப்பற்றில் தலைமைக் காரியாலயத்தினையும் கொண்டு கண்காணித்து வழிப்படுத்தப்பட்டுக் கொண்டு வருகிறது.

**Vision :**

We see a Sri Lanka, where all citizens experience equal opportunity and enjoy peace and vulnerable people make contributions to the Nation, successfully exercise their Rights and lead a dignified life.

**Mission Statement:**

SWOAD will continue to work with the socially and economically disadvantaged and conflict affected communities irrespective of their ethnicity, gender, age and religious and political identity and help them help themselves in further improving and sustaining their quality of life.

**Objective:**

- Provide a better life for the poor and disadvantaged through development activities
- Alleviate poverty by providing micro-credit and encouraging self-help
- Empower women through training, personal development, awareness and leadership skills
- Uplift the living standards and self-esteem of disadvantaged people
- Encourage and enable active participation by everyone in a democratic society
- Provide educational support to poor students and vocational training for youth
- Conserve the environment, improve health and raise knowledge and awareness
- Provide basic amenities, including toilets, wells, housing and rural roads

# TARGET GROUPS

- Women
- Children
- Elders
- Disable
- Youths
- Women Headers Families
- Vulnerable Families
- Students







**OPERATIONAL AREAS :**

| D.S. Division |
|---|
| |
| Alayadivembu |
| Navithanvely |
| Pottuvil |
| Sammanthurai |
| Thirukovil |
| Uhana |
| Kalmunai Tamil Division |
| Karaitivu |




**PROGRAMS**



# மேற்கொள்ளப்பட்ட செயல்திட்டங்கள் :

## 1. ஜீவனோபாய செயல்திட்டம் :

- **வீட்டுத் தோட்டச் செய்கை :**

சுனாமியினால் பாதிக்கப்பட்ட திருக்கோவில், பொத்துவில் பிரதேசங்களில் உள்ள விவசாயக் குடும்பங்களிடையே வீட்டுத் தோட்ட செய்கையை ஏற்படுத்தி அதன் ஊடாக அவர்களின் வருமானத்தை உயர்த்தும் நோக்குடன் FAO நிறுவனத்தின் உதவியுடன் விவசாயத்திணைக்களத்தின் வழிகாட்டலுடன் வீட்டுத் தோட்டம் தொடர்பான பயிற்சிகளும், அதற்கான விதை இனங்களும் நிறுவனத்தினால் வழங்கப்பட்டது.

**Details Given blow :**

| DS Division | Village | No. of Beneficiaries |
|---|---|---|
| Pottuvil | Komary | 100 |
| | Selvapuram | 100 |
| | Manalchenai | 110 |
| Thirukkovil | Thandiyadi | 40 |
| | Vinayagapuram | 60 |
| | Thirukkovil | 40 |
| | Gayathirikiramam | 50 |
| **Total** | | **500** |

- **சுயதொழில் கடன் வசதிகள் வழங்கல் :**

இச்செயல்திட்டத்தின் கீழ் Oxfam GB, Dan Church Aid, Diakonia, IFRC யுத்தம், சுனாமியினால் பாதிக்கப்பட்டு சொத்துக்கள், தொழில்களை இழந்த பொத்துவில், திருக்கோவில், நாவிதன்வெளி ஆகிய பிரதேசங்களில் வாழும் சுயதொழில்களை மேற்கொள்வதற்கு மூலதனம் இன்றி வாழ்கின்ற குடும்பங்களை மையமாகக் கொண்டு அவர்களுக்கு பல்தரப்பட்ட தொழில்களுக்கு கடன் வசதிகள் வழங்கப்பட்டது. இதன் ஊடாக இக்குடும்பங்கள் வருமானங்களைப் பெற்று தங்களது குடும்பங்களின் தேவைகளை நிறைவேற்றக் கூடியவர்களாக காணப்படுகின்றனர். அத்துடன் சேமிப்பு பழக்கமும் இவர்களிடையே காணப்படுகின்றது.

| **பிரதேசம்** | **தொழில்கள்** | **பயனாளிகள் எண்ணிக்கை** |
|---|---|---|
| பொத்துவில், திருக்கோவில்,காரைதீவு, கல்முனை, நாவிதன்வெளி | Paddy cultivation | 678 |
| | Goat Breeding | 350 |
| | Market gardening | 150 |
| | Brick Making | 39 |
| | Small Business | 280 |
| | Poultry farming | 100 |
| | Lagoon Fishing | 22 |
| | Cattle farming | 20 |

| | | |
|---|---|---|
| | Home gardening | 20 |
| | Small Scale trade | 21 |
| | Highland crop cultivation | 10 |
| | Sewing | 10 |

- **Providing Cash for Grant** :

இச் செயல்திட்டத்திற்கு அமைய சுனாமியினால் பாதிக்கப்பட்ட பொத்துவில், திருக்கோவில், காரைதீவு, கல்முனை போன்ற பிரதேசங்களில் தொழில்களை இழந்தவர்களின் வருமானத்தை ஏற்படுத்தும் முகமாக சுய தொழில்களை மேற்கொள்ளும் பொருட்டு Diakonia நி'றுவனத்தின் உதவியுடன் தொழில் உபகரணங்கள் வழங்கப்பட்டது.

| DS. Division | Sector | No of beneficiaries |
|---|---|---|
| Pottuvil, Thirukkovil, Karaithivu, Kalmunai | String Coppers | 59 |
| | Rice business | 26 |
| | Lagoon Fishing | 02 |
| | Carpentry | 16 |
| | Small Shop | 05 |
| | Mechanic | 07 |
| | Mason | 02 |
| **Total** | | **117** |

- **வருமானம் தரும் கட்டுமானப் பணிகள்** :

இச்செயல் திட்டத்தின் கீழ் Oxfam GB, NECCDEP போன்ற நிறுவனங்களின் நிதி உதவியினால் சுனாமியினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் மீனவர் குடும்பங்கள், விவசாயக் குடும்பங்களின் வருமானத்தை அதிகரிக்கும் முகமாக கீழ்வரும் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

| D.S. Division | Type of Infrastructure | No. of beneficiaries |
|---|---|---|
| Pottuvil, Thirukkovil, Karaithivu, Alayadivembu, Kalmunai | Tank Renovation | |
| | Paddy Store | 300 |
| | Market | 250 |
| | Agro Wells | 16 |
| | Common Drinking Wells | 250 |
| | MPCS Building | 350 |
| | Cooperative Building | 350 |
| | Rural Roads | 600 |
| | Fishermen rest room | 250 |
| | Drainage | 350 |
| | Causeway | 350 |

வருமானம் தரும் கட்டுமானப்பணிகளும், சுயதொழில்களை மேற்கொள்ளும் பயனாளிகளும்












## 02. சேமிப்புத் திட்டம் :

இத்திட்டத்தின் கீழ் 7 பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள 60 கிராமங்களில் உள்ள நிறுவனத்தின் நேரடியான 8500 பெண் அங்கத்துவ குடும்பங்களால் மாதாந்தம் கிராமக் குழுக்களின் ஊடாக சேமிப்பு செயல்திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இச் செயல்திட்டத்தின் ஊடாக 60 கிராமங்களில் உள்ள அங்கத்துவ குடும்பங்கள் சேமிப்பின் முக்கியத்துவத்தை அறிந்து வீணான செலவுகளை தவிர்த்து மாதாந்தம் தவறாது ரூபா 50.00 தொடக்கம் 200.00 வரை தங்களது வருமானத்தில் ஒரு தொகை சேமிப்பினை மேற்கொண்டு வருகின்றனர்.

**Details Given Blow :**

| D.S Division | No. of Saving members | Total Savings |
|---|---|---|
| Pottuvil | | 1,189,632.00 |
| Thirukkovil | | 2,813,224.00 |
| Karaithivu | | 997,516.00 |
| Kalmunai | | 1,749,531.00 |
| Sammanthura | | 962,538.00 |
| Navithanvely, Uhana | | 1,781,463.00 |

**03. முதியோர் அபிவிருத்தி :**

முதியோர் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் சுனாமியினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் தங்களது பிள்ளைகளால், உறவினர்களால் புறக்கணிக்கப்பட்டு எவ்வித உதவிகளுமின்றி இருக்கின்ற முதியோர்களை மையமாகக் கொண்டு இத்திட்டம் செயற்படுத்தப்பட்டது. குறிப்பாக இவ் முதியோர்களின் வருமானத்தை ஏற்படுத்தல் மற்றும் முதியோர்களின் சுயகௌரவத்தை ஏற்படுத்தல் அவர்களுக்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கில் இச் செயல்திட்டம் அமுல்படுத்தப்பட்டது.

**திட்டத்தின் விபரங்கள்**

| D.S Division | Activity | No. of beneficiaries |
|---|---|---|
| Pottuvil, Thirukkovil, Karaithivu, Kalmunai | Livelihood | 93 |
| Pottuvil, Thirukkovil, Karaithivu, Kalmunai | Water and Sanitation | 45 |
| Pottuvil, Thirukkovil, Karaithivu, Kalmunai | Elders day Celebration | 300 |








04. தொழில் பயிற்சிகள் வழங்கல் :

இத் செயல்திட்டத்தின் ஊடாக **ILO, WUSC** எனும் நிதி நிறுவனத்தின் உதவியுடன் யுத்தம் மற்றும் சுனாமியினால் பாதிக்கப்பட்ட தமிழ் மற்றும் முஸ்லிம் இளைஞர்களின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு இவ் இளைஞர்களுக்கு தொழிற் திறன்களை வழங்குவதன் ஊடாக அவர்கள் சொந்தக் காலில் நின்று தொழில் ஒன்றை ஆரம்பித்து அதன் ஊடாக வருமானத்தை ஏற்படுத்தும் முகமாக பல் துறைசார்ந்த தொழில் பயிற்சிகள் வழங்கப்பட்டது. அத்துடன் இப்பயிற்சி முடிவில் இப் பயிலுனர்களுக்கு தொழில் உபகரணங்களும் வழங்கப்பட்டது.

விபரம்

| No | D.S Division | VT Training | No of Youths |
|---|---|---|---|
| 1 | Alayadivembu, Thirukkivil | Driving | 40 |
| 2 | Thirukkovil | Electrical Wiring | 30 |
| 3 | Thirukkovil | Plumbing | 30 |
| 4 | Alayadivembu | Computer | 30 |
| 5 | Thirukkovil | Sewing | 30 |
| 6 | Kalmunai | Electrician | 25 |
| 7 | Thirukkovil | Carpentry furniture | 25 |
| 8 | Akkaraipattu | Ref. A/C Mechanic | 25 |

- **Vocational training Infrastructure:**

இச்செயல் திட்டத்தின் கீழ் திருக்கோவில், கல்முனை ஆகிய பிரதேச செயலக பிரிவில் NVQ தரத்திலான தொழில் பயிற்சி கட்டிடங்கள் அமைக்கப்பட்டன. இக்கட்டடங்களில் Carpentry Furniture, Electrician போன்ற தொழில் பயிற்சிகள் நடாத்தப்பட்டு வருவதுடன் இக்கட்டடத்தில் ஒரு தடவையில் 25 பயிலுனர்கள் தொழில் பயிற்சியை மேற்கொள்வதற்கான சகல வசதிகளும் உள்ளடக்கப்பட்டிருக்கின்றது. இதற்கான நிதி உதவிகளை World University of Canada (WUSC) எனும் நிதி நிறுவனம் வழங்கியது.

புதிதாக அமைக்கப்பட்ட NVQ தரத்திலான தொழில் பயிற்சி நிலையங்கள்







தொழலில் பயிற்சி நெறியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் இளைஞர், யுவதிகள்






பயிற்சியை முடித்துக் கொண்ட பயிலுனர்களுக்கான NVQ தரத்திலான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு :




05. சிறுவர் அபிவிருத்தி செயல்திட்டம் :

இச் செயல்திட்டத்தின் கீழ் Save the Children in Sri Lanka, FIT எனும் நிதி உதவியுடன் யுத்தம் மற்றும் சுனாமியினால் பாதிக்கப்பட்ட திருக்கோவில், கல்முனை,Navithanvely, Pottuvil போன்ற பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள சிறுவர்களின் அபிவிருத்தி தொடர்பாக பல்வேறு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டது. இச் செயல்திட்டத்தின் ஊடாக சிறுவர்களின் உளநலத்தில் மாற்றம் கொண்டுவரவும், சிறுவர்களின் திறன்கள் விருத்தி அடையவும், சிறுவர்களிடையே ஒற்றுமை, அன்பு, சமாதானம் என்பவற்றை ஏற்படுத்தவும், சிறுவர்களை பிழையான வழிகளில் செல்லாது நற்பிரஜைகளாக உருவாக்கவும், இச் சிறுவர்களின் நல்வாழ்வுக்கு பெற்றோர்களின் பங்கு அத்துடன் சமூகம், குடும்பத்தின் பங்கு பற்றியும் அத்துடன் இச்சிறுவர்களுக்கு சிறந்த சூழலை ஏற்படுத்தவும், கல்வியில் அக்கறை செலுத்தி சிறந்த கல்வி மான்களாக உருவாக்கவும் இத்திட்டம் பெரிதும் துணை புரிந்தது.

**Details Given blow :**

| DS Division | Activity | No. of Beneficiaries |
|---|---|---|
| Thirukkovil, Pottuvil, Navithanvely | Parents Awareness | 300 |
| | Children Exposure | 150 |

| | | |
|---|---|---|
| | Construction Preschool | 3 |
| | Providing Education materials and sports materials and Teaching materials | 5 Preschools |
| | Construction of children park | 5 |
| | Conducting Child rights, protection | 300 |
| | Conducting DRR, Child care, Nutrition, Leadership | 300 |
| | Conducting Rights and building Relationship, Child development | 300 |
| | Conducting Child communication, Early marriage, Education | 300 |
| | Family counseling | 35 |
| | Child scholarship | 15 |

மேலும் Dan Church Aid நிதி நிறுவன உதவியுடன் சிறுவர்களின் நலன் கருதி 7 முன்பாலர்பாடசாலைகள் அமைக்கப்பட்டதுடன் இப்பாடசாலைகளுக்கு கற்பித்தல் உபகரணங்கள்,மாணவர்களுக்கான சீருடைகள், ஆசிரியர்களுக்கான கொடுப்பனவு, பாடசாலை தளபாடங்கள், விளையாட்டு உபகரணங்கள், சிறுவர் பூங்கா மற்றும் இப்பாலர் பாடசாலைக்கு மலகூடங்களும் அமைத்துக் கொடுக்கப்பட்டது.

**Details given blow :**

| Preschool Location | No. of Preschools | No. of Children |
|---|---|---|
| 11th Colony | 1 | 35 |
| Vijayapura | 1 | 45 |
| 15th Colony | 1 | 35 |
| 13th Colony | 1 | 38 |
| Savalakkadai | 1 | 35 |
| Veeramunai | 1 | 40 |
| Kanager nager | 1 | 38 |










06. வீடமைப்புத் திட்டம் :

- **Permanent House:**

இச் செயல்திட்டமானது Christian Aid நிதி நிறுவனத்தினால் சுனாமியினால் பாதிக்கப்பட்ட கல்முனை, காரைதீவு போன்ற கிராமங்களில் உள்ள குடும்பங்களை இலக்குக் குழுக்களாக கொண்டு செயற்படுத்தப்பட்டது. இத்திட்டத்தில் சுனாமியினால் வீடுகளை இழந்து அகதி முகாம்களில் தங்கியுள்ள குடும்பங்களைச் சார்ந்த 100 குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டது.

**Detail Given below :**

| D.S.Division | Village | No. of House | No.of beneficaries |
|---|---|---|---|
| Kalmunai Tamil Division | Pandiruppu | 20 | 20 |
| | Kalmunai | 14 | |
| | Periyaneelavanai | 19 | |
| Kalmunai Muslims Division | Maruthamunai | 21 | |
| | Kalmunaikudi | 18 | |
| Karaithivu | Karaithivu | 08 | |

- **Upgrading Shelter:**

இச் செயல்திட்டமானது Dan Church Aid நிதி நிறுவனத்தினால் யுத்தத்தினால் வீடுகளை இழந்து பாதிக்கப்பட்ட நாவிதன்வெளி பிரதேச செயலாளர் பிரிவுகளில் குடிசைகளில் வாழ்கின்ற குடும்பங்களின் குடிசைகளை புனரமைப்பு செய்யும் முகமாக 68குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு 68 குடிசைகள் புனரமைக்கப்பட்டது. இதற்கான பயனாளிகள் பொதுக் கூட்டங்களில் மக்களால் தெரிவு செய்யப்பட்டனர்.

**Details given Blow:**

| **D.S.Division** | **Village** | **No. of House** | **No.of beneficiaries** |
|---|---|---|---|
| Navithanvely | Uhanai | 10 | 10 |
| | 15th Colony | 10 | 10 |
| | 11th Colony 1,2,3,4 | 25 | 25 |
| | 13th Colony | 10 | 10 |
| | Veppayadi | 08 | 08 |
| | Navithanvely | 05 | 05 |
| **Total** | | | **68** |

**சுனாமி, யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக அமைத்துக் கொடுக்கப்பட்ட நிரந்தர, தற்காலிக வீடுகள்**







## 07. Water and Sanitation:

- **Construction of Latrine :**

இச் செயல்திட்டமானது Christian Aid, Dan Church Aid நிதி நிறுவனத்தினால் சுனாமியினால் பாதிக்கப்பட்ட கல்முனை, காரைதீவு போன்ற கிராமங்களில் உள்ள குடும்பங்களை இலக்குக் குழுக்களாக கொண்டு செயற்படுத்தப்பட்டது. இத்திட்டத்தில் மலகூடங்கள் இல்லாத குடும்பங்களைச் சார்ந்த 160 குடும்பங்களுக்கு மலகூடங்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டது. அத்துடன் இம்மலகூடங்களைப் பெற்றவர்களுக்கு சுகாதாரம் பற்றிய கருத்தரங்கம் பொதுசுகாதார பரிசோதகரால் நடாத்தப்பட்டது.

| D.S.Division | Village | No. of House | No.of beneficiaries |
|---|---|---|---|
| Kalmunai | Periyaneelavai | 6 | 6 |
| | Pandiruppu | 20 | 20 |
| | Kalmunai | 20 | 20 |
| Karaithivu | Karaithivu | 14 | 14 |
| Navithanvely | 15th Colony | 30 | 30 |
| | Vijayapura | 25 | 25 |
| | 11th Colony | 25 | 25 |
| | 13th Colony | 25 | 25 |
| | Savalakkadai | 20 | 20 |

- **Construction of Common Drinking water Wells :**

இச் செயல்திட்டமானது Dan Church Aid, Christian Aid நிதி நிறுவனத்தினால் யுத்தம், சுனாமியினால் பாதிக்கப்பட்ட நாவிதன்வெளி, திருக்கோவில், கல்முனை, காரைதீவு, சம்மாந்துறை போன்ற கிராமங்களில் உள்ள குடும்பங்களை இலக்குக் குழுக்களாக கொண்டு 50 பொதுக் கிணறுகள் அமைக்கப்பட்டது. இத்திட்டத்தில் குடிநீர் தட்டுப்பாடான கிராமங்களில் இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டது. இக்கிணறுகளை எதிர்காலத்தில் பராமரிப்பதற்கென பயனாளிகள் இணைந்த User group உருவாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

**Detail Given Blow :**

| D.S Division | Village | No .of Wells | No. of Beneficiaries |
|---|---|---|---|
| Navithanvely | 13th Colony | 1 | |
| | Annamalai – 2 | 2 | |
| | | | |
| Sammanthurai | Malwattai | 2 | |
| Kalmunai | Pandiruppu | 16 | |
| | Periyaneelavanai | 10 | |
| | Kalmunai | 19 | |







**08. விழிப்புணர்வு கருத்தரங்குகள்**

பொத்துவில், திருக்கோவில், காரைதீவ, கல்முனை, சம்மாந்துறை, நாவிதன்வெளி, உகன போன்ற பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள தமிழ், சிங்களம், முஸ்லிம் ஆகிய 60 கிராமங்களில் பல்தரப்பட்ட விழிப்புணர்வு கருத்தரங்குகள் நடாத்தப்பட்டது. இக்கருத்தரங்குகளின் ஊடாக இம்மக்கள் பொதுப் பிரச்சினைகளை கையாளவும். ஆரச திணைக்கள உதவித் திட்டங்களை இலகுவாக பெறக்கூடிய வழிமுறைகள் பற்றியும், பிள்ளைகள் பராமரிப்பு, சூழல் பாதுகாப்பு, சுகாதாரம், போசாக்கு, DRR, HIV/AIDS, Addicted to liquor, Early marriage, Child right, Gender equality, Peace & harmoney போன்ற பல்வேறு வகையிலான விழிப்புணர்வு கருத்தரங்குகள் நடாத்தப்பட்டு மக்கள் வலுவூட்டப்பட்டனர். இச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு Christian Aid, Diakonia போன்ற நிறுவனங்கள் உதவிகளை வழங்கியது.

**09. பணியாளர், CBO Leader கொள்திறன் விருத்தி :**

பணியாளர்களின் கொள்திறனை மேம்படுத்தும் நோக்கில் Oxfam மற்றும் Diakonia, Dan Church Aid எனும் நிதி நிறுவனத்தின் உதவியுடன் பல்தரப்பட்ட பயிற்சிகள் கிராம மட்டம், பிரதேச மட்டம், மாவட்ட மட்டத்தில் பணிபுரிகின்ற பணியாளர்களுக்கு வழங்கப்பட்டு அவர்களின் கொள்தகுதிறன் விருத்தி செய்யப்பட்டது. இந்த வகையில் Community structure, micro credit management, Goat breeding, Business Management, market Gardening

management, Financial management, Proposal Writing, Gender, DRR, HIV/AIDS, Leadership, Project management, Report Writing போன்ற பயிற்சிகள் வழங்கப்பட்டது.

**பயிற்சிகளில் கலந்து கொள்ளும் மக்கள் :**

  

## 10. Education

- **Conducted A/L Classes :**

நாவிதன்வெளி மற்றும் பொத்துவில் போன்ற பின்தங்கிய கிராமங்களில் உள்ள உயர்தர மாணவர்களின் கல்வி நிலையை மேம்படுத்தும் நோக்கில் இக்கிராம மாணவர்களுக்கு இலவச உயர்தர வகுப்புக்கள் நடாத்தப்பட்டது. அரசியல், தமிழ், இந்துநாகரீகம், லொறிக், இந்து சமயம் ஆகிய பாடங்கள் சிறந்த ஆசிரியர்களால் மேதிக மீட்டல் வகுப்புக்கள் நடாத்தப்பட்டது. இவ் வகுப்புக்களில் 175 மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர். இவ் மேதிக மீட்டல் வகுப்புக்களால் 26 மாணவர்கள் பல்கலைக்கழகம் சென்றமையும் குறிப்பிடத்தக்கதாகும். இதற்கான நிதி உதவிகளை Diakonia நிதி நிறுவனம் வழங்கின.

- **Conducted O/L Classes:**

பொத்துவில், நாவிதன்வெளி போன்ற பின்தங்கிய கிராமங்களில் உள்ள க.பொ.த சாதாரணதர மாணவர்களின் கல்வி நிலையை மேம்படுத்தும் நோக்கில் இம்மாணவர்களுக்கு இலவச வகுப்புக்கள் நடாத்தப்பட்டது. கணிதம், விஞ்ஞானம், தமிழ், ஆங்கிலம் ஆகிய பாடங்கள் சிறந்த ஆசிரியர்களால் மேதிக மீட்டல் வகுப்புக்கள் நடாத்தப்பட்டது. இவ் வகுப்புக்களில் 53 மாணவ மாணவிகள் கலந்து கொண்டு பயன்பெற்றனர். இதற்கான நிதி உதவிகளை Diakonia, Dan church Aid எனும் நிதி நிறுவனங்கள் வழங்கின.

- **Conducted Scholarship Classes:**

நாவிதன்வெளி, திருக்கோவில் போன்ற பின்தங்கிய கிராமங்களில் **Scholarship** மாணவர்களின் கல்வி நிலையை மேம்படுத்தும் நோக்கில் இம்மாணவர்களுக்கு இலவச வகுப்புக்கள் நடாத்தப்பட்டது. விஞ்ஞானம், தமிழ், ஆக்கவியல்/கணிதம், சுற்றாடல், ஆங்கிலம் ஆகிய பாடங்கள் சிறந்த ஆசிரியர்களால் மேதிக மீட்டல் வகுப்புக்கள் நடாத்தப்பட்டது. இவ்

வகுப்புக்களில் 180 மாணவ மாணவிகள் கலந்து கொண்டு பயன்பெற்றனர். இதற்கான நிதி உதவிகளை Dan church Aid எனும் நிதி நிறுவனம் வழங்கின. இத்திட்டத்தினால் நாவிதன்வெளிப் பிரதேசத்தில் முதல் முதலாக ஒரு மாணவி சித்தி பெற்றதுடன், திருக்கோவில் பிரதேசத்தில் 5 மாணவ மாணவிகள் சித்தி பெற்றனர்.

**மாவணவர்களுக்கான இலவச மீட்டல் வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றமை :**









## 11. Environment Development:

சுனாமி, யுத்தம் அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் சுற்றுச் சூழல் மாசடைந்த நிலையிலும், பெரும்பாலான மரங்கள் அழிக்கப்பட்ட நிலையில் வரண்ட பிரதேசங்களாக காணப்படுகின்றமையை அவதானிக்க முடிகின்றது. இதனை நாம் கவனத்தில் கொண்டு எமது சுற்றுச் சூழலை பாதுகாக்கும் முகமாக Dan Church Aid நிதி நிறுவனத்தின் உதவியுடன் பயன்தரக்கூடிய மரங்கள் மக்களுக்கு வழங்கப்பட்டு அவர்களின் வீடுகளில் நடப்பட்டு அவர்களால் பராமரிக்கப்பட்டு வருகின்றது.

## Details Given Blow:

| D.S Division | Type of Plant | No. of Plant | No. of Beneficiaries |
|---|---|---|---|
| Thirukkovil | Mango | 350 | 350 |
| | Jack | 350 | |
| | Lime | 350 | |
| | Orange | 350 | |
| | | | |
| Navithanvely | Mango | 150 | 150 |
| | Jack | 150 | |
| | Lime | 150 | |
| | Orange | 150 | |
| **Total** | | **2000** | **500** |








## 12. Advocacy:

இச் செயல்திட்டத்தின் கீழ் திருக்கோவில் மற்றும் நாவிதன்வெளிக் கிராம மக்களை விழிப்புணர்வு ஊட்டும் முகமாக பல்வேறு வகையான பரிந்துரைவாதிடல் செயற்திட்டம் மேற்கொள்ளப்பட்டது. இதன் ஊடாக இம்மக்கள் தங்களது உரிமைகளை வென்றெடுக்கவும், தமது பிரச்சினைகள், தேவைகளை சுயமாக பெற்றுக் கொள்ளவும் இவ் பரிந்துரைவாதிடல் முக்கிய பங்காற்றின. இதற்கான நிதி உதவியினை Dan church Aid எனும் நிதி நிறுவனம் வழங்கியது.

**Details Given Blow:**

| **D.S. Division** | **Type of Activity** | **No. of Beneficiaries** |
|---|---|---|
| Thirukkovi, Navithanvely | Women’s day Celebration | 800 |
| | Children’s Day | 300 |
| | Environment Day | 300 |
| | Awareness on Education | 450 |
| | Gender issue | 450 |
| | Health issue | 450 |
| | HIV/AIDS | 450 |